# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

**TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL**

# அரையாண்டுத் தேர்வு

# 2014 - 2015

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 4

சுட்டெண்:.............................................................. நேரம்: 120 மணித்துளிகள்

1) **பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

1. இலக்கணநூல்களில் முதன்மையானது

_____________________ .

(சிலப்பதிகாரம், தொல்காப்பியம், திருக்குறள்)

2. பறையின் தன்மையை ஒத்தது _____________________ .

(தண்ணுமை, மேளம், முரசு)

3. **நொடி:-** ஐந்து வீட்டுக்கு ஒரு _____________________ .

(ஏற்றம், முற்றம், சுற்றம்)

4. நான் நேற்று முழுவதும் வீட்டிலேயே _____________________ .

(இருந்தேன், இருப்பேன், இருக்கின்றேன்)

5. அம்மா வீட்டுவேலைகளை _______________ எனச் செய்தார்.

(மளமள, மடமட, தடதட)

6. சிலப்பதிகாரத்தை எழுதியவர் _________________ .

(ஔவையார், திருவள்ளுவர், இளங்கோவடிகள்)

7. மாவீரர் நாளில் சங்கிலியன் நாடகம் தொடங்கியது.

_____________ அவையோர் கைகொட்டி ஆரவாரித்தனர்.

(இப்பொழுது, எப்பொழுது, அப்பொழுது)

8. முயற்சி உடையோர் _____________________ வாழ்வர்.

(இகழோடு, புகழோடு, அழகோடு)

9. காட்டு அரசனாக வாழ்ந்த விலங்கு ________________ .

(சிங்கம், நரி, முயல்)

10. சேரன்செங்குட்டுவன் ________________ ச் சிலைவடித்தான்.

(மாதவிக்கு, கண்ணகிக்கு, கோவலனுக்கு )

11. **பழமொழி:** பதறாத காரியம் ________________ .

(பதறாது, சிதறாது, மாறாது)

12. அரசன் கொடை வழங்கும்போது ஒலிக்கும் முரசு

________________ .

(படை முரசு, மண முரசு, கொடை முரசு)

13. இளந்திரையன் வன்னியாவுக்கு அஞ்சல் ________________ .

(எழுதினான், கதைத்தான், பேசினான் )

14. இடுக்கண் என்றால் ________________ .

(இன்பம், துன்பம், வறுமை)

15. தமிழில் உள்ள முதல் எழுத்துகள் ________________ .

(12 , 18 , 30 )

16. முத்தமிழ்க்காப்பியம் என அழைக்கப்படுவது

________________ .

(மணிமேகலை, திருக்குறள், சிலப்பதிகாரம்)

17. நாட்டார் கலையாகத் தோன்றி இன்று அரங்கக் கலையாக

மாறிய கலை ______________________ .

(கோலாட்டம், நடனம், சிற்பம்)

18. ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடி இருப்பது

______________________ .

(காகம், கிளி, கொக்கு)

19. கங்காரு ______________________ குட்டியை வயிற்றுப்

பையில் காவிச் செல்லும்.

(எனது, தனது, உனது)

20. நாலடியார் __________________ அடிகளைக் கொண்டது .

(நான்கு, இரண்டு, எட்டு)

21. உண்மையான நண்பர்களின் நட்பே நமக்கு

______________________ த் தரும் .

(தாழ்வை, உயர்வை, இகழ்வை)

22. தமிழர் வாழ்வில் __________________ ஒரு சிறந்த பண்பாடு .

(விருந்தோம்பல், இருந்தோம்பல், பரிந்தோம்பல்)

23. தன்னைத்தான் விரும்புகிறவன் பிறருக்குத் தீங்கு

______________________ .

(செய்வான், செய்யமாட்டான், செய்கிறான்)

24. விரவி என்றால் ______________________ .

(குறைந்து, மறைந்து, கலந்து)

25. வாழ்க்கை வழிகாட்டி என்று கூறப்படும் நூல்

______________________ .

(திருக்குறள், மூதுரை, புறநானூறு)

26. கற்கக் கற்கப் பெருகுவது ______________________ .

(கேணி, அறிவு, நட்பு)

27. பழந்தமிழர் இசை நுணுக்கங்களை நன்கு ________________

இருந்தனர்.

(அறிந்து, அறிந்த, அறிவும்)

28. காப்பியம் என்றால் ______________________ .

(சிறுகதை, குறுங்கதை, நெடுங்கதை)

29. **குறள்:-**

அறிவுடையார் ______________ உடையார் அறிவிலார்

என்உடைய ரேனும் இலர்

(எள்ளாம், எல்லாம், எழ்ழாம்)

30. பாலில் உள்ள நீர்த்தன்மையைப் பிரித்து பாலை மட்டும்

உண்ணும் பறவை ______________________ .

(கொக்கு, கிளி, அன்னம்)

| புள்ளிகள் 30 |
|---|

**2) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| குறுகுறு | மணிமணியாக | பார்க்கப்பார்க்க | இன்பதுன்பம் | படபட |

1. அக்காவின் கையெழுத்து ____________ இருந்தது .

2. விரைவாக ஓடியதால் வளவனின் நெஞ்சு ____________ என்று அடித்தது .

3. குழந்தை ____________ என்று நடந்து வந்தது .

4. எங்கள் வாழ்க்கையில் ____________ மாறி மாறி வருகின்றது .

5. தோட்டத்தில் பூத்த பூக்களைப் ____________ மகிழ்ச்சியாக இருந்தது .

| புள்ளிகள் 05 |
|---|

**3) பொருத்தமான முடிக்கும் சொல்லை எழுதி, சொல்லியங்களை நிறைவு செய்க.**

1. பாட்டி நல்ல நல்ல கதைகளைக்

   ______________________________ .

2. நான் தொலைக்காட்சியில் தமிழ் நிகழ்ச்சிகளைப்

   ______________________________ .

3. எமது மங்கல நிகழ்வுகளில் மேளம் முதன்மையான

   இடத்தைப் ______________________________ .

4. சிங்கம் கிணற்றுள் ______________________________ .

5. பொழிலனுக்கு நேற்றுத் தமிழ்த்திறன் போட்டி

   ______________________________ .

புள்ளிகள் 10

**4) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.**

தமிழ் நாட்டில் ஈரோடு என்னும் ஊர் உள்ளது. அவ்வூரில் ஈ.வெ.இராமசாமி என்பவர் பிறந்தார். அவர் தமிழ் மக்களிடையே பெரியார் என்ற சிறப்புக்கு உரியவர். அவர் சிறந்த சிந்தனையாளர். பெரியார் தமிழர் தன்மானத்துடன் வாழவேண்டும் என்று வலியுறுத்தினார். தமிழர் தங்கள் உரிமைகளுக்காகப் போராடவேண்டும் என்றும் கூறினார். பெரியார் மக்களுக்குப் பகுத்தறிவு தோன்றப் பரப்புரை செய்தார். அவர் மக்களுக்குப் பயனுள்ள பல தொண்டுகள் செய்தார். பெரியார் தமிழர்களின் உயர்வுக்காகப் பாடுபட்டார்.

1. ஈரோடு என்னும் ஊர் எங்கே உள்ளது?

_______________________________________________

2. பெரியார் என்ற சிறப்புக்கு உரியவர் யார்?

_______________________________________________

3. பெரியார் எதை வலியுறுத்தினார்?

_______________________________________________

4. பெரியார் எதற்காகப் போராட வேண்டும் என்று கூறினார்?

_______________________________________________

5. தமிழர்களின் உயர்வுக்காகப் பாடுபட்டவர் யார்?

_______________________________________________

புள்ளிகள் 10

**5) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| எழுதி | எல்லோரும் | ஆடிக்கூழ் | பாடல்களை | நவாலி |

சோமசுந்தரப் புலவர் ________________ என்னும் ஊரில் பிறந்தார். அவர் ஒரு சிறந்த புலவர். சிறு அகவையிலேயே ________________ எழுதத் தொடங்கினார். அவரது பாடல்கள் மிகவும் எளிமையானவை. அப்பாடல்கள் பழைமையும் புதுமையும் கொண்டவை . சோமசுந்தரப் புலவர் சிறுவர்களுக்கான பாடல்கள் பலவற்றை ________________ உள்ளார். அவற்றுள் சில கத்தரி வெருளி, ________________, பவளக்கொடி, தாடி அறுந்த வேடன் பேன்றவை. அவரைத் "தங்கத்தாத்தா" என்று ________________ அழைப்பர்.

புள்ளிகள் 10

**6) கீழே தரப்பட்டுள்ள சொற்களை உங்கள் வாழிடமொழியில் எழுதுக.**

1. மழை ________________
2. அரங்கு ________________
3. நத்தை ________________
4. பம்பரம் ________________
5. காளான் ________________

புள்ளிகள் 05

**7) மாறி இருக்கும் சொற்களை ஒழுங்குபடுத்தி, கருத்துள்ள சொல்லியமாக்குக.**

1. நான்காம் / படிக்கிறேன் / நான் / வகுப்பில்

______________________________________________ .

2. எல்லோரிடமும் / அன்பாகப் / பழகுவார் / ஆசிரியர்

______________________________________________ .

3. மிகச் / இலக்கியங்கள் / தமிழில் / சிறந்த / உள்ளன

______________________________________________ .

4. பறக்க / பறவைக் / முயன்றது / குஞ்சு

______________________________________________ .

5. கொழுக்கட்டை / அவித்தார் / ஆடிப்பிறப்பன்று / அம்மா

______________________________________________ .

புள்ளிகள் 05

**8) பாடநூல் வினாக்களுக்கு விடை தருக.**

1. திராவிட மொழிகளின் மூலமொழி எது?

_______________________________________________

_______________________________________________

2. தமிழருடைய கொண்டாட்டங்களில் சிறந்தவை எவை?

_______________________________________________

_______________________________________________

3. தோலினால் ஆன இசைக்கருவிகளை எப்படி அழைப்பர்?

_______________________________________________

_______________________________________________

4. தமிழில் உள்ள மெய் எழுத்துகள் எத்தனை?

_______________________________________________

_______________________________________________

5. கண்ணகி, கோவலன், மாதவி ஆகியோரின் கதையைக் கூறும் நூல் எது?

_______________________________________________

_______________________________________________

புள்ளிகள் 10

9. **தரப்பட்டுள்ள படத்தை வைத்து, 30 சொற்களுக்குக் குறையாமல் கதை எழுதுக.**



புள்ளிகள் 15